**செய்தி வெளியீடு எண் : 030** **நாள்: 05.01.2022**

**மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் இன்று (05.01.2022) நேரு விளையாட்டு அரங்கில் சிறப்பு குழந்தைகளுக்கான 800 மீட்டர் தொடர் ஓட்டத்தை தொடங்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.**

சிறப்பு குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் சென்னை, நேரு விளையாட்டு அரங்கத்தில் இன்று (05.01.2022) காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

சிறப்பு குழந்தைகளுக்கான 50 மீட்டர், 100 மீட்டர் ஓட்டம், பந்து எறிதல் (BOCCE THROW) நின்று குதித்தல் (STANDING JUMP) மற்றும் 800 மீட்டர் தொடர் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் 250 – க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகள் பங்கேற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி மாலையில் நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ மெய்யநாதன் அவர்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 800 மீட்டர் தொடர் ஓட்டத்தை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

**நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது கூறியதாவது:–**

மாற்றுத்திறனாளிகள், சிறப்பு குழந்தைகள் மீது அன்பும், கருணையும் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இவர்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

கொரோனா காலத்தில் அவர்கள் இல்லங்களுக்கே சென்று பரிசோதனை மற்றும் தடுப்பூசி போட ஏற்பாடு செய்தார்கள்.

பாராலிம்பிக்கில் வெற்றி பெற்ற மாரியப்பனுக்கு அரசின் சார்பில் ரூபாய் 2 கோடி ஊக்கத்தொகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். மாற்றுத்திறனாளிகளின் மேல் கொண்ட அக்கறையால் அந்த துறையினை தனது நேரடி கண்காணிப்பில் வைத்து பல்வேறு நல உதவிகளை செயல்படுத்தி வருகிறார்கள் எனக் கூறினார்.

காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போட்டிகளை நீதியரசர் (ஓய்வு) திரு. வெங்கடராமன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஆனந்தகுமார் இ.ஆ.ப., அவர்கள், நடிகர் திரு.சூரி, குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் டாக்டர். சரண்யா ஜெயக்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் (பொ) திரு.ராமதுரைமுருகன், துணைமேலாளர் திரு.சாமுவேல் ராஜா டேனியல் மற்றும் சங்கமித்ரா பவுண்டேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**